பாடம் 8 பெப்ரவரி 15-21

# கொந்தளிக்கும் கடலிலிருந்து வானத்து மேகங்களுக்கு



## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 7; 2தெச 2:1-12; ரோமர் 8:1; மாற்கு 13:26; லூக்கா 9:26; 12:8; 1தீமோ 2:5.*

**மனன வசனம்:** வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான். தானியேல் 7:27.

தானியேல் 7இன் தீர்க்கதரிசனத்தை ஆராயப்போகிறோம். தானி 2இன் விரிவாக்கமான இதில் கவனிக்கவேண்டிய 4 அம்சங்கள் உள்ளன.

**முதலாவது**, இரவில் கொடுக்கப்பட்ட அந்தத் தரிசனத்தில் நான்கு காற்றுகளால் கொந்தளித்த சமுத்திரம் வருகிறது. தண்ணீரும் இருளும் சிருஷ்டிப்பைச் சுட்டிக்காட்டுகின்றன; அவை தாக்குதலின்கீழ் இருந்தன.

**இரண்டாவது**, தரிசனத்தில் தீட்டான, கலப்பின மிருகங்கள்காட்டப்படுகின்றன; சிருஷ்டிப்பு ஒழுங்கு மீறப்படுவதை அது சுட்டிக்காட்டுகிறது.

**மூன்றாவது**, அந்த மிருகங்கள் ஆளுகை செலுத்தியதாகச் சொல்லப்படுகிறது. தோட்டத்தில் ஆதாமுக்கு தேவன் கொடுத்த ஆளுகையை இந்த மிருகங்கள் பறித்தது தெரிகிறது.

**நான்காவது**, மனுஷகுமாரனின் வருகையால், அந்த ஆளுகையானது உரியவர்களிடம் மீண்டும் ஒப்படைக்கப்படுகிறது. தோட்டத்தில் ஆதாம் தொலைத்ததை, பரலோக நியாயத்தீர்ப்பில் மனுஷகுமாரன் மீட்டுக்கொள்கிறார்.

இந்த அடையாளத் தரிசனத்தின் பின்னணியிலுள்ள வேதாகமத்தின் பரந்த காட்சியை விளங்கிக்கொள்ள மேலுள்ள விளக்கம் உதவுகிறது. தரிசனத்தின் முக்கிய விவரங்களை தூதன் விளக்குகிறான்; அதனால் இந்தத் தீர்க்கதரிசனத்தின் முக்கிய நோக்கங்கள் தெரிகின்றன.

*2020, பெப்ரவரி 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நான்கு மிருகங்கள்

**கேள்வி: தானி 7இல், தானியேல் கண்ட தரிசனத்தின் சாராம்சம் என்ன? எதற்காக அந்தத் தரிசனம் கொடுக்கப்பட்டது?**

நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் பகுதிகளை தானியேல் கண்ட மிருகங்கள் சுட்டிக்காட்டின. ஆனால் ஒவ்வொரு ராஜ்யத்தையும் பற்றி அதிக விளக்கங்கள் உள்ளன. அஞ்ஞான தேசங்களைச் சுட்டிக்காட்டு கிற அந்த மிருகங்கள் அனைத்தும் அசுத்தமான மிருங்கள். நான்காம் மிருகத்தைத்தவிர மற்ற மிருகங்கள், ஏற்கனவே பழக்கமான மிருகங் கள்தாம். அந்த மிருகங்கள் ஏதோ ஓர் அடையாளமாக அல்ல, ஒவ் வொரு ராஜ்யத்தின் ஏதாவது அம்சத்தைக் குறிக்கிற தன்மைகளைப் பெற்றிருப்பதால் அவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சிங்கம்:** பாபிலோனிய கலைப்படைப்புகளையும், அரண்மனை சுவர்களையும் செட்டைகளுள்ள சிங்கங்கள் அழகுபடுத்தின. தரிசனத் தில் கண்ட அந்தச் சிங்கத்தின் செட்டைகள் பிடுங்கப்பட்டு, மனுஷனைப் போல நிமிர்ந்து நிற்கும்படி செய்து, மனித இருதயம் அதற்குக் கொடுக் கப்படுகிறது. பாபிலோனின் ராஜாக்கள் காலத்தில் பாபிலோன் எப்படி இருந்ததென்பதை இந்தச் செயல்முறை காட்டுகிறது.

**கரடி:** மேதிய-பெர்சிய சாம்ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்றது; மேதியர்களைவிட பெர்சியர் களின் கை ஓங்கியிருந்தது. மூன்று விலா எலும்புகளைக் கவ்விக்கொண்டி ருந்தது என்பது லிதியா, பாபிலோன், எகிப்து ஆகிய மூன்று நாடுகளை யும் மேதிய-பெர்சியா கைப்பற்றியதைச் சுட்டிக்காட்டுகிறது.

**சிவிங்கி:** வேகத்திற்கு பெயர்போன சிவிங்கி, மகா அலெக் ஸாண்டர் ஸ்தாபித்த கிரேக்க சாம்ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அந்த நான்கு செட்டைகளும் அந்த மிருகத்தை மேலும் வேகமுள்ளதாக் கின. அது அலெக்ஸாண்டரைக் கச்சிதமாக எடுத்துக்காட்டுகிறது. அப் போது அறியப்பட்டிருந்த உலகம்முழுவதையும் கொஞ்சக் காலத்திற் குள் ளேயே தன்னுடைய ஆளுகையின்கீழ் கொண்டுவந்தான்.

**கெடியும் பயங்கரமுமான மிருகம்:** முந்தின ராஜ்யங்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட மிருகங்களுக்கு ஒத்திருந்ததாகச் சொல்லப்பட் டன. முதலாவது ‘சிங்கத்தைப்’ போலவும், இரண்டாவது ‘கரடியைப்’ போலவும் இருந்தது; ஆனால் இந்த மிருகம் எதைப் போலவும் இல்லை. பல கொம்புகளையுடைய இந்த மிருகம் முந்தினவைகளைவிட கொடிய தாக, கொன்று குவிக்கிறதாக இருந்தது. அஞ்ஞான ரோமைச் சுட்டிக்காட்டும் மிகச்சரியான உதாரணம். அது உலகத்தைக் கைப்பற்றி, ஆட்சிசெய்து, தன் காலின்கீழ் மிதித்துப்போட்டது.

முன்னுரைக்கப்பட்டது போலவே மனித வரலாறு கடந்து சென்றுள்ளது. ஆரவாரத்திற்கும் பதற்றத்திற்கும் குழப்பத்திற்கும் மத்தியிலும் தேவனே அரசாளுகிறார் என்கிற உண்மை உங் களுக்கு எவ்வளவு ஆறுதலைத் தருகிறது? வேதாகமம் நம்பிக்கைக்குப் பாத்திரமானது என்பதை இது எவ்வாறு எடுத்துக்காட்டுகிறது?

## திங்கள் பெப்ரவரி 17

# சின்ன கொம்பு

**கேள்வி: நான்காம் மிருகத்திலிருந்து எழுந்து, அதில் ஓர் அங்கமாயிருந்த சின்னகொம்பு யார்? தானி 7:7,8,19-25.**

---

பத்துக்கொம்புகளுடன் கெடிதாயிருந்து, உலகத்தை கொடுமையாக ஆட்சிசெய்த மிருகம் அஞ்ஞான ரோம் என்று நேற்று பார்த்தோம். சின்னகொம்பும் அதன் வல்லமையும் எதைச் சுட்டிக்காட்டுகிறதெனப் பார்ப்போம். தரிசனத்தில், அந்த நான்காம் மிருகத்திற்கு பத்துக்கொம்புகள் இருந்தன; சின்னகொம்பு முளைக்கும்படி அவற்றில் மூன்று கொம்புகள் பிடுங்கப்பட்டன. அந்தக் கொம்புக்கு மனித கண்கள் இருந்தன; 'பெருமையானவைகளை' அது பேசிற்று. தானி 7:8. கொடிய மிருகம் சுட்டிக்காட்டிய அமைப்பிலிருந்து எழுந்த சின்ன கொம்பு அஞ்ஞான ரோமைச் சுட்டிக்காட்டியது. அஞ்ஞான வல்லமையின் நீட்சியான சில தன்மைகளை அது சுட்டிக்காட்டுகிறது. அதே வல்லமையின் பிற்காலத்தில் இந்தக் கொம்பு எழும்புகிறது.

இந்தக் கொம்பு பரிசுத்தவான்களுக்கு எதிராக யுத்தம் செய்ததாக தானியேல் காண்கிறான். இந்தக் கொம்பு ஒரு ராஜா என்றும், அவன் சட்டத்திற்கு விரோதமான மூன்று செயல்களைச் செய்வானென்றும் தூதன் விளக்குகிறான்.

1 உன்னதமானவருக்கு விரோதமாக பெருமையானவைகளைப் பேசுகிறான்.

2 உன்னதமானவருடைய பரிசுத்தவான்களைஉபத்திரவப்படுத்துகிறான்.

3 காலங்களையும் பிரமாணத்தை யும் மாற்ற நினைக்கிறான். அதனால், பரிசுத்தவான்கள் அவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

4 அடுத்து, சின்னகொம்புஇவ்வாறு செயல்படப்போகிறகாலக்கட்டத்தை தூதன் சொல்கிறான்; அதாவது, காலமும் காலங்களும் அரைக்காலமும். தீர்க்கதரிசன மொழியின்படி காலம் என்பது 'வருடம்' ஆகும். காலங்கள் என்பது வருடம் என்பதற்கான இருமை முறை; அதாவது 'இரண்டு வருடங்கள்.' எனவே மூன்றரை வருட தீர்க்கதரிசன காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. நாள்-வருடம் நியதியின்படி இது 1,260 வருடங்களைக் குறிக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் சின்ன கொம்பு தேவனுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்கும்; பரிசுத்தவான்களை உபத்திரவப்படுத்தும், தேவனுடைய பிரமாணத்தை மாற்றுவதற்கு முயற்சிசெய்யும்.

---

சின்ன கொம்புக்கும் 2தெச 2:1–12இல் சொல்லப்படும் கேட்டின் மகனுக்கும் இடையே காணப்படுகிற ஒற்றுமைகள் என்ன? இங்குச் சொல்லப்படுகிற வல்லமை எது? ஏன்? அஞ்ஞான ரோமிலிருந்து எழுந்து, இன்றும் அஞ்ஞான ரோமில் அங்கம்வகிக்கிற, அஞ்ஞான ரோமின் காலத்திலிருந்து உலகத்தின் முடிவுமட்டும் இருக்கிற, அதாவது இன்றும் காணப்படுகிற வல்லமை எது?

# நியாயசங்கம் உட்கார்ந்தது

தரிசனத்தில் நான்கு மிருகங்களையும் சின்ன கொம்புவின் செயல்பாடுகளையும் கண்டபிறகு, பரலோகத்தின் நியாயத்தீர்ப்பு காட்சியை தீர்க்கதரிசி காண்கிறார். தானி 7:9,10,13,14. நியாயசங்கம் தொடங்கியதும், சிங்காசனங்கள் வைக்கப்படுகின்றன; நீண்ட ஆயுசுள்ளவர் தம் சிங்காசனத்தில் அமர்கிறார். காட்டப்பட்ட அந்தப் பரலோகக் காட்சியில், நீண்ட ஆயுசுள்ளவருக்குமுன்பாக ஆயிரமாயிரமான பரலோக ஜீவிகள் தொழுதுகொள்கிறார்கள்; நியாயசங்கம் அமர்கிறது; புத்தகங்கள் திறக்கப்படுகின்றன.

சின்ன கொம்பு செயல்படுகிற 1260 வருடக்காலத்திற்குபிறகு, (கி.பி. 538-1798) ஆனால் தேவனுடைய ராஜ்யம் இறுதியாக ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறது. தரிசனத்தில் மூன்று முறை பின்வரும் வரிசை மீண்டும்மீண்டும் சொல்லப்படுகிறது:

சின்ன கொம்புவின் காலம் (538-1798)
பரலோக நியாயத்தீர்ப்பு
தேவனுடைய நித்திய ராஜ்யம்

**கேள்வி: அந்த நியாயத்தீர்ப்பு எவ்வாறு தேவனுடைய மக்களுக்கு நன்மையாக இருக்கிறது? தானி 7:13,14,21,22,26,27.**

நியாயத்தீர்ப்பின் பல்வேறு செயல்பாடுகளை பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தும் தேவாலயத்திலிருந்தும் அறிய முடிகிறது. ஆனால், இங்குச் சொல்லப்படுகிற நியாயத்தீர்ப்பு வித்தியாசமானது. இது சின்ன கொம்புவின்மேல் மட்டுமல்ல, இறுதியில் ராஜ்யத்தைப் பெறப்போகிற உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்மேலும் தாக்கத்தை உண்டாக்குகிற ஒரு நியாயத்தீர்ப்பு.

அந்த நியாயத்தீர்ப்பு எவ்வாறு ஆரம்பித்து, முடிந்தது என்று விளக்கம் சொல்லப்படவில்லை. தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் எதிராக சின்ன கொம்பு தாக்குதல் தொடுக்கிற சூழலில் இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறது. அதாவது, அது அனைத்துலக அளவில் நடைபெறத் துவங்குகிற ஒரு நியாயத்தீர்ப்பு. அது எப்போது துவங்குகிறது என்பதையும், பரலோக பாவ நிவாரண நாளில் பரலோக ஆசரிப்புக்கூடாரம் சுத்திகரிப்படுவதற்கும் இதற்கும் சம்பந்தமிருக்கிறது என்பதையும் தானி 8, 9 அதிகாரங்களிலிருந்து அறியமுடிகிறது. அதுபற்றி வருகிற வாரங்களில் படிப்போம். தேவ மக்களுக்கு சாதகமான, வருகைக்கு முந்தைய ஒரு நியாயத்தீர்ப்பு பரலோகத்தில் நடைபெறுவதை இது சுட்டிக்காட்டுகிறது.

இயேசு நமக்காக சிலுவையில் நிறைவேற்றியிருப்பதுதான் நியாயத்தீர்ப்பு குறித்து நாம் நம்பிக்கையோடிருக்கச் செய்கிறது; அது ஏன்? சிலுவையில்லாமல் நாம் ஏதாவது நம்பிக்கையைப் பெறமுடியுமா? நம்பிக்கை இருக்குமா? ரோமர் 8:1.

# மனுஷகுமாரனுடைய வருகை

**கேள்வி: தானி 7:13இல் மனுஷகுமாரன் என்று சொல்லப்படுவது யார்? அவரை எவ்வாறு அடையாளம் காணமுடிகிறது? மாற்கு 13:26; மத் 8:20; 9:6; லூக் 9:26; 12:8.**

நியாயத்தீர்ப்பு நடக்கிறது; அங்கே மனுஷகுமாரன் வருகிறார்.

**முதலாவது,** மனுஷகுமாரன் பரலோகத்தில் இருக்கிற ஒருவராகக் காட்டப்படுகிறார். அவரிடம் மனித தன்மைகளும் காணப்பட்டதை அவருடைய பெயர் காட்டுகிறது. அதாவது, தெய்வீக-மனித ஜீவியான அவர், நியாயத்தீர்ப்பில் ஒரு முக்கியப் பங்காற்றுவதற்காக வருகிறார்.

**இரண்டாவது,** மனுஷகுமா ரன் வானத்து மேகங்களுடன் வருகிறார்; புதிய ஏற்பாட்டில் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்ட பயன்படுகிற உருவகம் அது. மனுஷ குமாரன் வானத்திலிருந்து பூமிக்கு அல்ல, பரலோகத்தில் ஓரிடத்திலிருந்து நீண்ட ஆயுசுள்ளவர் இருந்த இடத்திற்குச் சென்றதாக தானி 7:13 சொல்கிறது.

**மூன்றாவது,** மனுஷ குமாரன் வானத்து மேகங்களுடன் வருவது, எல்லாரும் காணும்படி அவர் தம்மை வெளிப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தக் காட்சி பிரதான ஆசாரியனை நினைவுப்படுத்துகிறது. அவன் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுத்திகரிப்பதற்காக பாவ நிவாரணநாளில் தூபவர்க்க புகை சூழ, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வான்.

மனுஷகுமாரன் ராஜ தோற்றத்துடன் இருக்கிறார். ‘சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது.’ தானி 7:14. ‘சேவி’ என்கிற வினைச்சொல்லை ‘தொழு’ என்றும் மொழிபெயர்க்கலாம். 1-7 அதிகாரங்களில் ஒன்பது முறை அந்த வார்த்தை வருகிறது. தானி 3:12,14,17,18,28; 6:16,20; 7:14,27. தெய்வத்திற்குச் செலுத்தப்படுகிற தொழுகையை இது சுட்டிக்காட்டுகிறது. சின்ன கொம்பானது தேவனுடைய பிரமாணத்தை மாற்ற நினைப்பதால், அந்தச் சின்ன கொம்பு சுட்டிக்காட்டுகிற மார்க்கமுறையானது தேவனுக்குச் செலுத்தவேண்டிய தொழுகையைக் கெடுக்கிறது. உண்மையான தொழுகை இறுதியில் நிலைநாட்டப்பட்டதை நியாயத்தீர்ப்பு காட்சி காட்டுகிறது. போப்புமார்க்க தொழுகை முறையில்காணப்படுகிற பல விஷயங்களில், விழுந்துபோன ஒரு மனிதனை தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையே ஒரு மத்தியஸ்தனாக வைப்பதும் அடங்கும். தேவனுக்குமுன் மனிதர்களின் பிரதிநிதியாக மத்தியஸ்தம் பண்ணுகிற தகுதியைப் பெற்றவர் மனுஷகுமாரன் மட்டுமே என்று தானியேல் காட்டுகிறது. ‘தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே’ என்று வேதாகமம் சொல்லுகிறது. 1தீமோ 2:5.

இயேசுவின் வாழ்க்கையையும் குணத்தையும் பற்றி வேதாகமத்தில் ஏராளம் வாசிக்கிறோம். இங்குச் சொல்லப்படுகிற நியாயத்தீர்ப்பிலும் அவரே மையமாக இருக்கிறார் என்பது எவ்வளவுக்கு ஆறுதலாக உள்ளது?

# உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்

**கேள்வி: தேவனுடைய பிள்ளைகளுக்கு என்ன சம்பவிப்பதாக பின்வரும் வசனங்கள் சொல்கின்றன? தானி 7:18,21,22,25,27.**

'உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்' என்பது தேவனுடைய பிள்ளைகள். சின்ன கொம்பு சுட்டிக்காட்டுகிற வல்லமை அவர்களைத் தாக்குகிறது. வேத வசனத்திற்கு உண்மையாக இருப்பதிலிருந்து அவர்கள் பின்வாங்காததால், போப்புமார்க்க ஆளுகையின்போது அவர்கள் உபத்திரவமடைகிறார்கள். அஞ்ஞான ரோம சாம்ராஜ்யத்தின் காலத்திலும்கூட (நான்காம் மிருகம்) கிறிஸ்தவர்கள் உபத்திரவமடைந்தார்கள்; ஆனால், தானி 7:25 சுட்டிக்காட்டும் உபத்திரவம் சின்ன கொம்பால் பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டதாகும். ரோமின் அஞ்ஞான ஆட்சி முடிவடையும் சமயத்தில் இந்தக் கொம்பு தோன்றுகிறது.

ஆனால் தேவ ஜனங்கள் என்றென்றைக்கும் உலக வல்லமையின் அடக்குமுறைக்கு ஆளாவதில்லை. உலக ராஜ்யங்களை அகற்றிப்போட்டு, தேவ ராஜ்யம் தோன்றும். தரிசனத்தில் மனுஷகுமாரனுக்கு 'கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது.' தானி 7:14. ஆனால் அதற்கு தூதன் விளக்கம் சொல்லும்போது, 'பரிசுத்தவான்கள்' ராஜரீகத்தைப் பெறுகிறார்களெனச் சொல்லுகிறான். தானி 7:18. இதில் எந்த முரண்பாடும் இல்லை. மனுஷ குமாரன் தெய்வீகத்திற்கும் மனுஷீகத்திற்கும் பிரதிநிதியாக இருப்பதால், அவருடைய வெற்றி அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் மனிதர்களுடைய வெற்றியாகும்.

பிரதான ஆசாரியன் இயேசுவிடம், "நீர்தான் மனுஷகுமாரனாகிய மேசியாவா?" என்று கேட்டபோது, சங் 110:1; தானி 7:13,14 போன்ற வசனங்களை இயேசு சுட்டிக்காட்டி, "நான் அவர்தான்; மனுஷகுமாரன் சர்வ வல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்" என்று சொன்னார். மாற்கு 14:62. எனவே, பரலோக நீதிமன்றத்தில் நம் பிரதிநிதியாக நிற்பவர் இயேசுமட்டுமே. அவர் அந்தகாரத்தின் வல்லமைகளைத் தோற்கடித்து, தம்மிடம் வருகிறவர்களுக்கு அந்த வெற்றியைக் கொடுக்கிறார். எக்காரணத்திற்காகவும் நாம் பயப்படவேண்டாம். அது பற்றி பவுல் இவ்வாறு சொல்கிறான்: 'இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.' ரோமர் 8:37-39.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே வரலாற்றை துல்லியமாக தானியேல் புத்தகம் சொல்லியிருக்கிறது. எதிர்காலம் பற்றிய தேவனுடைய வாக்குறுதிகள் அனைத்தையும் நாம் நம்புவதற்கு இது எவ்வாறு உதவவேண்டும்?

## மேலும் படிக்க:

வடக்கிலிருந்து வந்த கொடூரர்களின் தாக்குதலால் ரோம சாம்ராஜ்யம் விழுந்தது. கொடூர இனத்தவர்களில் மூன்று பிரிவினரை அழித்ததைச் சாதகமாக்கிக் கொண்ட ரோமின் பிஷப், கி.பி 538இல் ரோமின் தனி வல்லமையாக தன்னை நிலை நிறுத்துகிறார். ரோம சாம்ராஜ்யத்தின் பல்வேறு நிறுவனங்களையும், அரசியல் நடவடிக்கைகளையும் அவர் பொறுப்பேற்று நடத்தினார். இப்படித்தான் போப்புமார்க்கம் உருவானது; அரசியல், மத வல்லமையைப் பெற்றது. 1798இல் நெப்போலியன் அதற்கு முடிவுகட்டினான். ஆனால் அதோடு ரோம் முடிந்துபோகவில்லை; அந்தக் குறிப்பிட்ட உபத்திரவக்காலம் மட்டுமே முடிந்தது. போப்பு தன்னை கிறிஸ்துவின் பதிலாளி என்று சொன்னார்; கூடவே, வேதாகமத்திற்கு முரணான பல்வேறு கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தினார். 'காலங்களையும் பிரமாணத்தையும்' மாற்றும்படி போப்புமார்க்கம் அறிமுகம் செய்தவற்றில் உத்தரிப்பு ஸ்தலம், பாவமன்னிப்புசீட்டு, பாவமன்னிப்பு அறிக்கை, ஓய்வுநாள் கற்பனையை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றுதல் போன்றவையும் அடங்கும்.

'சத்துருவின் குற்றச்சாட்டுகளைத் தன் சுய பெலத்தால் மனிதன் எதிர்கொள்ள முடியாது. தன் குற்றத்தை அறிக்கையிட்டு, கறைபடிந்த வஸ்திரங்களோடு, தேவனுக்கு முன்பாக நிற்கிறான். ஆத்துமக் காவலை விசுவாசத்தோடும் மனந்திரும்புதலோடும் தம்மிடம் அர்ப்பணித்துள்ள யாவர் சார்பாகவும் திறமையாக வேண்டுகிறார் நம் வழக்கறிஞரான இயேசு. அவர் அவர்களுக்கு ஆதரவாக வேண்டிக்கொள்கிறார்; கல்வாரியில் செய்யப்பட்டதைத் திறமையாக எடுத்துரைத்து, குறைகூறுகிறவனைத் தோற்கடிக்கிறார். தேவனுடைய பிரமாணத்திற்கு அவர் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்ததால், வானத்திலும் பூமியிலும் சகல வல்லமையும் அவருக்குக் கிடைத்திருக்கிறது; பாவமனிதன் தம்மோடு ஒப்புரவாகவும் அவன் இரக்கம் பெறவும் தம் பிதாவிடம் அவர் வேண்டுகிறார். தம் ஜனங்களைக் குற்றஞ்சாட்டுபவனிடம், "கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக. சாத்தானே, இவர்கள் என் இரத்தத்தால் விலைக்கிரயமாக வாங்கப்பட்டு, அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா?" என்பார். விசுவாசத்தோடு தம்மைச் சார்ந்துள்ளோரிடம், "பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்" எனும் நிச்சயத்தைக் கொடுப்பார். சகரியா 3:4.' – *EGW, PK*, பக். *586,587.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *சின்ன கொம்பானது நான்காம் மிருகமாகிய ரோமிலிருந்து எழுந்து, அதன் அங்கமாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்குமுன் அஞ்ஞான ரோமிலிருந்து எழுந்து, தேவமக்களை உபத்திரவப்படுத்தி, இன்றும் இருக்கிற வல்லமை எது? சின்ன கொம்பு என்பது ஓர் அஞ்ஞான கிரேக்க ராஜா; இயேசுவின் முதலாம் வருகைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமுன்னரே அவன் வரலாற்றிலிருந்து காணாமல்போனான் என்பது போன்ற ஊகங்களை நம்பாமல் இருக்க இது எவ்வாறு உதவும்? சின்ன கொம்பு என்பது இனி எழப்போகிற ஒரு வல்லமை என்று நாம் ஊகிக்காமல் இருக்கவும் இது எவ்வாறு உதவக்கூடும்?*